# <u>தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம்</u>

**செய்தி வெளியீட்டு எண்**: 130/2024 **நாள்**: 11.11.2024

## செய்தி வெளியீடு

நேரடி நியமனங்களில் சமூக நீதியை வலுப்படுத்த, 2024-ம் ஆண்டில் தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் ஒருங்கிணைந்த பொறியியல் பணிகள் தேர்வு மூலம் பட்டியலின மற்றும் பழங்குடியினருக்கான குறைவு காலிப்பணியிடங்களை (shortfall vacancies) நிரப்ப 50 தேர்வர்களை தெரிவு செய்துள்ளது.

மேலும், 2024-ம் ஆண்டு ஒருங்கிணைந்த குடிமைப் பணிகள் தேர்வு – I (தொகுதி I பணிகள்) மூலம் 12 குறைவு காலிப்பணியிடங்களையும், ஒருங்கிணைந்த குடிமைப் பணிகள் தேர்வு - II (தொகுதி II மற்றும் IIA பணிகள்) மூலம் 135 குறைவு காலிப்பணியிடங்களையும், ஒருங்கிணைந்த குடிமைப் பணிகள் தேர்வு - IV (தொகுதி IV பணிகள்) மூலம், 434 குறைவு காலிப்பணியிடங்களையும், ஆக மொத்தம் 581 பட்டியலின மற்றும் பழங்குடியினருக்கான குறைவு காலிப்பணியிடங்களை நிரப்ப அறிவிக்கை வெளியிடப்பட்டுள்ளது. மேலும் தொழில்நுட்ப பணிகளிலும் குறைவு காலிப்பணியிடங்களை நிரப்ப நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது எனத் தெரிவித்து கொள்ளப்படுகிறது.

**ச. கோபால சுந்தர ராஜ், இ.ஆ.ப.,**

**செயலாளர்**